632



# கோவை தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

632/51

ார்ட் டெக்ஸ்ட் புக் கம்பெனி
ஈரோடு

TB
031(2)
NS1
14/6/65

# கோவை
# தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

வித்துவான் S. நாகராசன், B.O.L., B.T.,
தமிழாசிரியன்,
தூய மேரி போதனுமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்.

ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி
ஈரோடு

பதிப்புரிமை]
1951
[விலை அணு 6

முதற் பதிப்பு—நவம்பர் 1951

TB
03 (2)
N51

146165
சென்னை-600 008.

Kabeer Printing Works, Madras (1789)

# முகவுரை

'கோவை தமிழ் வாசகம்' என்னும் இப்பாடநூல் வரிசை, கடைசியாக 1939-ஆம் ஆண்டில் ஆரம்ப வகுப்புகட்கென்று கல்வித்துறையினர் வெளியிட்டுள்ள பாடவியலை முற்றிலும் தழுவி முறைப்படி அமைந்துள்ளது. அப்பாடவியலில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இவ்வரிசையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மொழிப் பயிற்சி பற்றிய பொது விதிகளையும், பொருட் பயிற்சி பற்றிய சிறப்பு விதிகளையும் கருத்திற் கொண்டு அவற்றோடு சிறிதும் முரண்படா வகையில் இஃது ஆக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் பெற்ற வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல பொருள்களைப் பற்றிப் புதுச் சொற்களை அறிந்து பயன்படுத்தி உரையாடல், சிறு சம்பவங்களைக் கோவையாகச் சொல்லல், படித்தல், மவுனமாகப் படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுதற்கு இயன்ற முறையில் பாடங்களும், பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் பிறவும் இவ்வரிசையில் சிறப்பாக அமைந்துள்ளன. சிறுவர்களின் சொல்லறிவும் பேச்சுப் பயிற்சியும் உரம்பெறுதற்கு உறுதுணையாதற் பொருட்டுப் பாடங்கள் பெரிதும் உரையாடல் முறையிலேயே எழுதப்பட்டுள்ளன. சிறுவர்கள்

விரும்பிப் படித்து மகிழ்ந்து பாடத்தக்க எளிய இனிய அபிநயப்பாட்டுகளும், பாப்பாப் பாட்டுகளும், நீதிப் பாட்டு களும் தெளிவான விளக்கப் படங்களுடன் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாற்ருன் இப்பாடநூல் வரிசை, தெளிவான பொரு ளறிவும் திருந்திய மொழிப் பயிற்சியும் பெறத் தொடங்கும் இளஞ்சிருர்க்கு உறுதுணையாக அமைந்து பெரும் பயன் விளைப்பதாக அமைந்திருத்தலின், தொடக்க நிலைக் கல்வி யுலகத்தில் சிறக்க வரவேற்புக் கொள்ளும் என நம்பு கின்ருேம்.

ஆசிரியன்.

OFFICE OF THE REGISTRAR OF ...
14 DEC 1951
MADRAS

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பார்ப்பதைச் சொல் | ... | 1 |
| 2. | செய்வதைச் சொல் | ... | 2 |
| 3. | லட்டு (அபிநயப் பாட்டு) | ... | 3 |
| 4. | நிறம் | ... | 4 |
| 5. | கட்டளை | ... | 5 |
| 6. | பயிற்சிப் பாடம் | ... | 6 |
| 7. | காலம் | ... | 7 |
| 8. | பயிற்சிப் பாடம் | ... | 8 |
| 9. | கேள்வியும் பதிலும் | ... | 9 |
| 10. | ,, ,, | ... | 11 |
| 11. | பயிற்சிப் பாடம் | ... | 12 |
| 12. | கோழி | ... | 13 |
| 13. | வாரம் | ... | 14 |
| 14. | மாதங்கள் | ... | 16 |
| 15. | பண்டிகைகள் (படம்) | ... | 19 |
| 16. | ஆகாயம் | ... | 20 |
| 17. | பசுவும் கன்றும் | ... | 24 |
| 18. | திசைகள் | ... | 25 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 19. | எங்கள் குடும்பம்–1 | ... | 26 |
| 20. | ,, ,, –2 | ... | 30 |
| 21. | ,, ,, –3 | ... | 34 |
| 22. | **குடும்பம்** | ... | 38 |
| 23. | நரியின் தந்திரம் | ... | 39 |
| 24. | படம் பார்த்துக் கதை சொல்லல் | ... | 42 |
| 25. | வீட்டு மிருகங்கள் | ... | 43 |
| 26. | **மிருகங்கள்** | ... | 48 |
| 27. | பறவைகள் | ... | 49 |
| 28. | **பறவைகள்** | ... | 54 |
| 29. | எங்கள் பாடசாலே–1 | ... | 55 |
| 30. | ,, ,, –2 | ... | 61 |
| 31. | யார் ? என்ன செய்கிருர் ? (படம்) | ... | 66 |
| 32. | நன்றியுள்ள நாய் | ... | 67 |
| 33. | படம் பார்த்துக் கதை சொல்லல் | ... | 70 |
| 34. | **கொடி வணக்கம்** | ... | 71 |
| 35. | **பாப்பாப் பாட்டு** | ... | 73 |
| 36. | **உலகநீதி** | ... | 74 |

# 1. பார்ப்பதைச் சொல்



# 2. செய்வதைச் சொல்





# 3. லட்டு

(அபிநயப் பாட்டு)

மாமி செய்த லட்டு
வாங்கி மடியில் கட்டு
எடுத்துக் கொஞ்சம் பிட்டு
இனிக்க வாயில் இட்டு
தின்று வெளியில் ஓடு
தித்திக்கப் பாட்டுப் பாடு

# 4. நிறம்



சங்கு வெண்மை நிறம்
உடையது



காகம் கருமை நிறம்
உடையது



கிளி பசுமை நிறம்
உடையது



மிளகாய் வற்றல் சிவப்பு
நிறம் உடையது



எலுமிச்சம் பழம் மஞ்சள்
நிறம் உடையது




கடல் நீல நிறம் உடையது

# 5. கட்டளை



குழந்தைக்குப் பால் கொடு
பாலுக்குப் பணம் கொடு
பணம் வைக்கப் பெட்டி கொடு
பெட்டிக்குச் சாவி கொடு



உடுக்க உடை வாங்கு
உடைக்கு நூல் வாங்கு
நூலுக்குப் பஞ்சு வாங்கு
பஞ்சு நூற்க ராட்டை வாங்கு



இடுப்பில் ஆடையைக் கட்டு
ஆடையை மூட்டை கட்டு
மூட்டையை வண்டியில்
கட்டு
வண்டியில் மாட்டைக் கட்டு

# 6. பயிற்சிப் பாடம்



1. இது ஒரு —
இந்தப் பசு —
பசு — கொடுக்கும்



2. இவை —
இந்த மரங்கள் —
தென்னை மரங்கள் —
வளரும்



3. இவன் ஒரு —
இந்தச் சிறுவன் —
பள்ளிக்கூடச் சிறுவன் —
படிக்கிறான்



4. இவள் ஒரு —
இந்தப் பெண் – ஆடுகிறாள்
பந்து — இருக்கும்




5. இவர்கள் —
இந்தப் பிள்ளைகள் —
ஓட்டம் உடம்புக்கு —

# 7. காலம்



மரத்தில் கிளை இருந்தது
கிளையில் கொம்பு இருந்தது
கொம்பில் கூடு இருந்தது
கூட்டில் குருவி இருந்தது



வழியில் குளம் இருக்கிறது
குளத்தில் தாமரை இருக்கிறது
தாமரையில் பூ இருக்கிறது
பூவில் வண்டு இருக்கிறது



தோட்டத்தில் புற்று இருக்கும்
புற்றில் பாம்பு இருக்கும்
பாம்புக்குப் பல் இருக்கும்
பல்லில் விஷம் இருக்கும்

# 8. பயிற்சிப் பாடம்



1. அது ஒரு —
அந்த மரம் —
வாழை மரத்துக்கு — இல்லை

2. அவை —
அந்த மாடுகள் — மாடுகள்
எருது மாடுகள் — இழுக்கும்

3. அவன் ஒரு —
அந்தப் பிச்சைக்காரனுக்கு
— இல்லை
கால் இல்லாதவன் — ஆவான்

4. அவள் ஒரு —
அந்தக் கிழவிக்கு — இல்லை
கை இல்லாதவள் — ஆவாள்

5. அவர்கள் —
அந்த மனிதர்கள் —
செய்கிறார்கள்.
வேலை செய்தால் —
கிடைக்கும்

# 9. கேள்வியும் பதிலும்



நீ யார் ?

நான் ஒரு மாணவன்.

நீ வேகமாக நட.

நீ என்ன செய்கிருய் ?

நான் வேகமாக நடக்கிறேன்.

நீ மெதுவாக நட.

நீ என்ன செய்கிருய் ?

நான் மெதுவாக நடக்கிறேன்.

நீ புத்தகத்தை எடு.

நீ என்ன செய்தாய் ?

நான் புத்தகத்தை எடுத்தேன்.
நீ புத்தகத்தை மேஜையின்மேல் வை.
நீ என்ன செய்தாய் ?
நான் புத்தகத்தை மேஜையின்மேல்
வைத்தேன்.
நீ பேனவை மேஜையின்கீழ் வை.
பேன எங்கு இருக்கிறது ?
பேன மேஜையின்கீழ் இருக்கிறது.
நீ நாற்காலிக்குப் பக்கத்தில் நில்.
நீ எங்கு நிற்கிருய் ?
நான் நாற்காலிக்குப் பக்கத்தில் நிற்கிறேன்.
நீ பென்சிலே எடு.
நீ பென்சிலால் என்ன செய்வாய் ?
நான் பென்சிலால் எழுதுவேன்.
நீ பலகையை எடு.
நீ எதனுல் பலகையில் எழுதுவாய் ?
நான் பலப்பத்தால் பலகையில் எழுதுவேன்.




# 10. கேள்வியும் பதிலும்

நீ எங்குப் போகிருய் ?
நான் பள்ளிக்கூடம் போகிறேன்.
உன் பள்ளிக்கூடம் எது?
என் பள்ளிக்கூடம் அது.
நீங்கள் எங்குப் போகிறீர்கள்?
நாங்கள் விளையாடப் போகிருேம்.
உங்கள் ஆசிரியர் எங்கே?
எங்கள் ஆசிரியர் முன்பே போனுர்.

1789—2

# 11. பயிற்சிப் பாடம்



1. — என் புத்தகம்.

— என் பம்பரம்.

2. — என் குடைகள்.

— என் செருப்புகள்.

3. — என் தங்கை.

— என் தம்பி.

4. — என் அண்ணன்.

— என் அக்காள்.

5. — என் பெற்றோர்கள்.

— என் சகோதரர்கள்.




# 12. கோழி

கோழீ கோழீ வா வா
 கொக்கோ கோ என்று வா
கோழீ ஓடி வா வா
 கொண்டைப் பூவைக் காட்டு வா
குத்திச் சண்டை செய்யவோ
 குப்பை கிண்டி மேயவோ
கத்தி போலுன் கால் விரல்
 கடவுள் தந்து விட்டனர் ?
காலை கூவி எங்களைக்
 கட்டில் விட்டெ ழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
 வெற்றி கொண்ட கோழியே !

—தேசிக விநாயகம் பிள்ளை.




## 13. வாரம்

**தங்கை :**—அண்ணு! நீ ஏன் இன்று பள்ளிக் கூடம் போகவில்லை?

**அண்ணன் :**—இன்று ஞாயிற்றுக் கிழமை. இன்று பள்ளிக்கூடம் இல்லை. ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூட விடுமுறை நாள் ஆகும்.

**தங்கை :**—நாளை என்ன கிழமை அண்ணு?

**அண்ணன் :**—நாளை திங்கள் கிழமை. நாளை பள்ளிக்கூடம் உண்டு.

**தங்கை :**—எந்த எந்தக் கிழமைகளில் பள்ளிக் கூடம் உண்டு?

**அண்ணன் :**—திங்கள் கிழமை, செவ்வாய்க் கிழமை, புதன் கிழமை, வியாழக் கிழமை, வெள்ளிக் கிழமை ஆகிய ஐந்து நாள்களிலும் முழு நாளும் பள்ளிக்கூடம் உண்டு. சனிக்கிழமை அன்று காலையில் மாத்திரம் பள்ளிக்கூடம் நடக்கும்; மாலையில் நடவாது.

**தங்கை :**—கிழமைகள் எத்தனை அண்ணா?

**அண்ணன் :**—ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனக் கிழமைகள் ஏழு ஆகும். ஏழு நாள்கள் கொண்டது ஒரு வாரம் எனப்படும்.

**பயிற்சி**

1. கிழமைகளை ஞாயிறு முதல் வரிசையாகச் சொல். புதன் முதல் ஒரு வார நாள்களைச் சொல்.
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை அமைத்து வாசி.
   (1) ——— நாள்கள் கொண்டது ஒரு வாரம்.
   (2) —— கிழமை பள்ளிக்கூட விடுமுறை நாள் ஆகும்.
   (3) திங்கள் கிழமை பள்ளிக்கூடம் ———.
   (4) ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் ———.
3. உண்டு × இல்லை—இச் சொற்களைக் குறித்துக் கொள். இவற்றை வெவ்வேறு வாக்கியங்களில் வைத்துச் சொல்லப் பழகு.
4. அண்ணன் – அக்காள், தங்கை – தம்பி. இவற்றைக் குறித்துக்கொள்.
5. நடக்கும் – நடவாது. இவற்றைக் குறித்துக் கொள்.




## 14. மாதங்கள்

**மகன் :**—அம்மா ! அதோ மஞ்சள் ஆடை உடுத்திக்கொண்டு கூட்டமாகப் போகிறார்களே, அவர்கள் எங்கே போகிறார்கள்? அவர்கள் ஏன் ‘ கோவிந்தா ’ என்று கூவுகிறார்கள் ?

**தாய் :**—அவர்கள் திருப்பதிக்குப் போகிறார்கள். திருப்பதியில் கோவிந்தராஜர் என்னும் கடவுள் இருக்கிறார். அவர் பெயரைக் கூவிக்கொண்டு போகிறார்கள். இது

புரட்டாசி மாதம் அல்லவா? இந்த மாதத்தில் திருப்பதியில் பெரிய திருவிழா நடக்கும். அவர்கள் அதற்குப் போகிறார்கள்.

**மகன்** :—இது புரட்டாசி மாதமா? மாதம் என்றால் என்ன அம்மா?

**தாய்** :—முன் பாடத்தில் வாரத்தைப் பற்றிப் படித்தாய் அல்லவா? அந்த வாரங்கள் நான்கு கொண்டது ஒரு மாதம் ஆகும். ஒரு மாதத்திற்கு முப்பது நாள்கள்.

**மகன்** :—முன் மாதம் என்ன மாதம்?

**தாய்** :—முன் மாதம் ஆவணி மாதம்.

**மகன்** :—அடுத்த மாதம் என்ன மாதம்?

**தாய்** :—அடுத்த மாதம் ஐப்பசி மாதம்.

**மகன்** :—மாதங்கள் எத்தனை அம்மா?

**தாய்** :—சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என மாதங்கள் பன்னிரண்டு ஆகும். பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு வருஷம் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| மாதம் | திருப்பதி | கடவுள் | எத்தனை |
| முப்பது | முன் | அடுத்த | சித்திரை |
| வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி |
| புரட்டாசி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
| தை | மாசி | பங்குனி | வருஷம் |

## பயிற்சி

1. மாதங்களில் முதல் மாதம் எது? கடைசி மாதம் எது?
2. மாதங்களைச் சித்திரையிலிருந்து வரிசையாகச் சொல்.
3. ஐப்பசி மாதம் தொடங்கிப் பன்னிரண்டு மாதங்களைச் சொல்.
4. ஆனி மாதத்திற்கு முன் மாதம் எது? பின் மாதம் எது?
5. தீபாவளி, கிருஷ்ண ஜயந்தி, சரஸ்வதி பூஜை – இப்பண்டிகைகள் எந்தெந்த மாதங்களில் வருகின்றன?
6. புரட்டாசி, கார்த்திகை, தை – இந்த மாதங்களில் வரும் பண்டிகைகளைச் சொல்.
7. ஒரு வருஷத்திற்கு எத்தனை நாட்கள்? எத்தனை வாரங்கள்? கணக்கிட்டுச் சொல்.
8. இனத்தைச்சேராத வார்த்தைகளை நீக்கிவிட்டு வாசி.
   (1) பச்சை, நீலம், இனிப்பு, மஞ்சள்.
   (2) கைப்பு, புளிப்பு, கார்ப்பு, சிவப்பு.
   (3) திங்கள், வியாழன், ஆனி, சனி.
   (4) தை, பங்குனி, ஆவணி, செவ்வாய்.
9. பெரிய × சிறிய – இச்சொற்களைக் குறித்துக்கொள். இவற்றை வாக்கியங்களில் வைத்துச் சொல்லப் பழகு.

# 15. பண்டிகைகள்






# 16. ஆகாயம்

**மகள் :**—அப்பா ! அதோ ஆகாயத்தைப் பாருங்கள். சந்திரன் வெள்ளித் தட்டுப் போல வட்டமாகத் தோன்றுகிறது !

**தந்தை :**—ஆமாம். இன்று பௌர்ணமி அல்லவா ? சந்திரன் வட்ட வடிவமாகத்தான் தோன்றும்.

**மகள் :**—பௌர்ணமி என்றால் என்ன அப்பா ?

**தந்தை :**—சந்திரன் பூரணமாகத் தோன்றும் நாளுக்குப் பௌர்ணமி என்பது பெயர். அன்று சந்திரன் மூளி இல்லாமல் வட்டமாகத் தோன்றும்.

**மகள் :**—ஆமாம் அப்பா ! இரண்டு நாள்களுக்கு முன் சந்திரன் இப்படித் தோன்றவில்லை. மூளியாகத்

தான் தோன்றியது. சந்திரன் நாளை இப்படி வட்ட மாகத் தோன்ருதோ அப்பா ?

**தந்தை** :—தோன்ருது. அது நாளையிலிருந்து தேய்ந்துகொண்டே போகும். அப்பொழுது அதற்குத் தேய்பிறை என்பது பெயர்.

**மகள்** :—சந்திரன் முழுதும் தோன்ருத நாளும் உண்டோ ?

**தந்தை** :—உண்டு. அந்த நாளுக்கு அமாவாசை என்பது பெயர். அன்று ஒரே இருளாக இருக்கும்.

**மகள்** :—பிறகு என்ன ஆகும் ? மீண்டும் தோன்ருமலே போய் விடுமோ ?

**தந்தை** :—இல்லை. மறுநாள் முதல் அது சிறிது சிறிதாகத் தோன்றி வளரும். அப்பொழுது அது வளர்பிறை எனப்படும். சந்திரன் வெளிச்சத்திற்கு என்ன பெயர் தெரியுமா உனக்கு ?

**மகள்** :—ஒ ! தெரியுமே. நிலா என்பது பெயர்.

**தந்தை** :—சரி. சூரியன் வெளிச்சத்திற்கு என்ன பெயர் ?

**மகள்** :—இது தெரியாதோ அப்பா ! வெய்யில் என்பது பெயர். நிலா குளிர்ச்சியாக இருக்கிறது. வெய்யில் நிலவைப் போலக் குளிர்ச்சியாக இராது.

அது வெப்பமாக இருக்கும். அப்பா! சந்திரன் எப்பொழுது மறையும்?

**தந்தை** :—சந்திரன் காலையில் மறையும். சந்திரன் எப்பொழுது தோன்றும்? எப்பொழுது பிரகாசிக்கும்?

**மகள்** :—சந்திரன் மாலையில் தோன்றும். இரவில் பிரகாசிக்கும்.

**தந்தை** :—சூரியன் எப்பொழுது தோன்றும்? எப்பொழுது பிரகாசிக்கும்? எப்பொழுது மறையும்?

**மகள்** :—சூரியன் காலையில் தோன்றும். பகலில் பிரகாசிக்கும். மாலையில் மறையும்.

**தந்தை** :—ஆகாயம் நீல நிறமாக விளங்குகின்றது. சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஆகாயத்திற்கு அழகு செய்கின்றன. அவை இல்லாவிட்டால் ஆகாயத்திற்கு இவ்வளவு அழகு ஏது?

| | | |
|---|---|---|
| ஆகாயம் | அமாவாசை | பகல் |
| வெள்ளி | நிலா | இரவு |
| வெய்யில் | நக்ஷத்திரம் | வட்டம் |
| குளிர்ச்சி | மேகம் | பௌர்ணமி |
| வெப்பம் | வெளிச்சம் | தேய்பிறை |
| பிரகாசிக்கும் | அழகு | வளர்பிறை |

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து வாசி.

   (1) சந்திரன் பூரணமாகத் தோன்றும் நாளுக்கு ——— என்பது பெயர்.

   (2) சந்திரன் தோன்ருத நாளுக்கு ——— என்பது பெயர்.

   (3) சந்திரன் இரவில் ———.

   (4) சூரியன் காலையில் ———.

   (5) சந்திரன் ——— தோன்றும்.

   (6) சூரியன் ——— மறையும்.

   (7) சூரியன் பகலில் ———.

   (8) சந்திரன் பகலில் ———.

2. சந்திரனைவிட, நக்ஷத்திரங்களைவிட, குறைவு, அதிகம்—இவற்றில் பொருத்தமானதைக் கோடிட்ட இடத்தில் சேர்த்து வாசி.

   (1) நக்ஷத்திரங்கள் ——— மிகவும் சிறியவை.

   (2) சந்திரன் ——— மிகவும் பெரியது.

   (3) சந்திரனுக்குச் சூரியனைக் காட்டிலும் வெளிச்சம் ———.

   (4) சந்திரனுக்கு நக்ஷத்திரங்களைக் காட்டிலும் வெளிச்சம் ———.

3. தேய்பிறை × வளர் பிறை, குளிர்ச்சி × வெப்பம், காலை × மாலை, இரவு × பகல், பெரியது × சிறியது, குறைவு × அதிகம்—இச்சொற்களைக் குறித்துக் கொள்.

4. தந்தை - தாய், மகள் - மகன்—இவற்றைக் குறித்துக்கொள்.

5. தோன்றும் - தோன்ருது—இவற்றைக் குறித்துக் கொள்.



## 17. பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
    வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
    கன்றுக் குட்டி.

அம்மா என்குது
    வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
    கன்றுக் குட்டி.

நாவால் நக்குது
    வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
    கன்றுக் குட்டி.

—தேசிக விநாயகம் பிள்ளை.




சென்னை-600 008.

# 18. திசைகள்

திசை என்பது பக்கம். நம்மைச் சுற்றிலும் நான்கு பக்கங்கள் உள்ளன. நீ எழுந்து நில். உனக்கு முன் இருப்பது முன்பக்கம்; பின் இருப்பது பின்பக்கம்; வலக்கைப் பக்கம் இருப்பது வலப்பக்கம்; இடக்கைப் பக்கம் இருப்பது இடப் பக்கம்.

சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு ஆகும். சூரியன் அஸ்தமிக்கும் பக்கத்தை மேற்கு என்கிறோம். கிழக்குக்கு எதிர்ப் பக்கம் மேற்கு. மேற்குக்கு எதிர்ப் பக்கம் கிழக்கு. சூரியன் காலையில் கிழக்குத் திசையில் தோன்றுகிறது. அது மாலையில் மேற்குத் திசையில் மறைகிறது.

நீ சூரியன் தோன்றும் திசையை நோக்கி நில். உனக்கு முன் இருப்பது கிழக்கு; பின் இருப்பது

TB 031(20) N51

மேற்கு; உன் வலக்கைப் பக்கம் தெற்கு ஆகும்; இடக்கைப் பக்கம் வடக்கு ஆகும். நீ சூரியன் மறையும் திசையை நோக்கி நில். உனக்கு முன்னுல் இருப்பது மேற்கு; பின்னுல் இருப்பது கிழக்கு; உன் வலக்கைப் பக்கம் வடக்கு; இடக்கைப் பக்கம் தெற்கு.

வடக்குக்கு எதிரான திசை தெற்கு. தெற்குக்கு எதிரான திசை வடக்கு. ஆகவே கிழக்கு, மேற்கு வடக்கு, தெற்கு எனத் திசைகள் நான்கு ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| திசை | வலக்கை | கிழக்கு | தோன்றும் |
| இடக்கை | மேற்கு | மறையும் | முன் பக்கம் |
| எதிர்ப் பக்கம் | வடக்கு | பின் பக்கம் | அஸ்தமிக்கும் |
| தெற்கு | உதிக்கும் | முன்னுல் | பின்னுல் |

### பயிற்சி

1. இப் படத்தை மவுனமாக வாசி.
2. இதில் சொல்லியுள்ளபடி செய்து திசைகளைக் கண்டுபிடி.
3. இவற்றைக் குறித்துக் கொள் :
   முன் × பின், வலம் × இடம், உதிக்கும் × அஸ்தமிக்கும்
   தோன்றும் × மறையும்.
4. சூரியன் காலையில் ——— திசையில் தோன்றுகிறது.
   சூரியன் ——— மேற்குத் திசையில் ———.
5. நான் நடக்கிறேன் — இதே போல் கீழே கோடிட்ட இடங்களில் ‘ நட ’ என்னும் சொல்லை அமைத்து வாசி.

| | |
|---|---|
| நாங்கள் ——— | அவள் ——— |
| நீ ——— | அவர்கள் ——— |
| நீங்கள் ——— | அது ——— |
| அவன் ——— | அவை ——— |



# 19. எங்கள் குடும்பம்—1

**சுந்தரி :**—மேரி, தாஜ்பீபி, வாருங்கள் ! காலே வேளேயில் எங்குப் புறப்பட்டீர்கள் ?

**மேரி :**—எங்கும் இல்லே. இன்று ஞாயிற்றுக் கிழமை அல்லவா ? சிநேகிதர்களேப் பார்த்துப் பேசவே வந்தோம். இதுதான் உங்கள் வீடோ ?

**சுந்தரி :**—ஆமாம். இது தெரியாதோ உனக்கு ?

**மேரி :**—தெரியாது. இன்றுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன். உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிருர்கள் ?

**சுந்தரி :**—எங்கள் வீட்டில் பாட்டனர், பாட்டியார், தந்தையார், தாயார், அண்ணன், இரண்டு தம்பி

மார், இரண்டு அக்காள்மார், தங்கை, கைக்குழந்தை இவர்கள் இருக்கிருர்கள்.

**தாஜ்பீபி** :—உங்கள் குடும்பம் மிகவும் பெரிய குடும்பம். எங்கள் குடும்பம் அவ்வளவு பெரியது அன்று. மேரி! உங்கள் குடும்பம் மிகவும் சிறிய குடும்பம் அல்லவா?

**மேரி** :—எங்கள் குடும்பம் சுந்தரியின் குடும்பத்தைவிடச் சிறியதுதான். ஆனல் உங்கள் குடும்பத்தைக் காட்டிலும் பெரியது. சுந்தரி! அவர்கள் எல்லோரும் இப்பொழுது எங்கு இருக்கிருர்கள்?

**சுந்தரி** :—ஒரு தம்பி தெருவில் விளையாடுகிருன். மற்ருெரு தம்பி தோட்டவேலை செய்துகொண்டு இருக்கிருன். அண்ணன் கம்பங் கொல்லையைச் சுற்றிப் பார்க்கப் போயிருக்கிருன். தங்கை தொட்டில் ஆட்டுகிருள். ஒரு அக்காள் வீதியில் கோலம் இடுகிருள். இன்னொரு அக்காள் சமையல் அறையை மெழுகிக்கொண்டு இருக்கிருள். நான் இந்நேரம் வீடு பெருக்கினேன். பாட்டனர் ராட்டையில் நூல் நூற்கிருர். பாட்டியார் மாவு அரைக்கிருள். தாயார் தோட்டத்தில் பாத்திரம் கழுவுகிருள். தந்தையார் வயலைச் சுற்றிப் பார்க்கப் போனர். அவர் வரும்போது வீட்டுக்கு வேண்டும் சாமான்களும், காய்கறிகளும் வாங்கி வருவார். தந்தையார் குடும்பத்திற்குத் தலைவர். அவர் வெளி வேலைகளைக் கவனிப்பார். தாயார் குடும்பத் தலைவியார். அவர் வீட்டு வேலைகளைக்

கவனிப்பார். நாங்கள் அவர்கள் சொற்படி அடங்கி நடப்போம்.

**தாஜ்பீபி** :—நாங்களும் அப்படியேதான். பெற்ருேர்க்கு அடங்கி நடப்பது நம் கடமையாகும். நம் வீட்டு வேலைகளை நாமே செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் குடும்பம் சிறப்பாக நடக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சிநேகிதர்கள் | சமையல் | சாமான்கள் | தலைவர் |
| தலைவியார் | பெற்ருேர் | கடமை | வயல் |

### பயிற்சி

1. உன் குடும்பத்தில் உள்ளவர்களைச் சொல்.
2. உன் குடும்பத்தில் உள்ளவர்கள் செய்யும் வேலைகளைச் சொல்.
3. உன் குடும்பத் தலைவரைச் சொல்; தலைவியைச் சொல்.
4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி:

   தந்தையார் குடும்பத்திற்குத் —.
   தாயார் குடும்பத்திற்குத் —.
   தந்தையார் — வேலைகளைக் கவனிப்பார்.
   தாயார் — வேலைகளைக் கவனிப்பார்.

5. இவற்றைக் கவனி:

| | |
|---|---|
| வீடு | வந்தோம் |
| குடும்பம் | பார்க்கிறேன் |
| பாட்டியார் | ஆட்டுகிருள் |
| தந்தையார் | போனுர் |
| சுந்தரி | வருவார் |
| மேரி | நடப்போம் |




# 20. எங்கள் குடும்பம்—2

**சுந்தரி** :—வாருங்கள், உள்ளே போகலாம். இது எங்கள் வாசிப்பு அறை. இது புத்தகம் வைக்கும் அலமாரி. இது உடை வைக்கும் பீரோ. இவை என் புத்தகங்கள். அது என் அண்ணன் மேஜை. அவை என் தம்பிகளின் பலகைகள். இன்னும் நாற்காலி இருக்கிறது. முக்காலி இருக்கிறது. பெட்டி இருக்கிறது. மைக்கூடும், பேனவும், பென்சிலும், விளக்கும் இருக்கின்றன. தீப்பெட்டி, கொத்துச் சாவி, சூரிக் கத்தி, நோட்டுப் புத்தகம், கண்ணடி, கடிகாரம் இவைகளும் இருக்கின்றன.

**மேரி** :—படிப்பதற்குத் தகுதியான அறை. நல்ல வெளிச்சம் இருக்கிறது. தாஜ்! அறை எவ்வளவு சுத்த

மாக இருக்கிறது பார். அதோ சுவரில் சரஸ்வதி, திருவள்ளுவர், பாரதியார் இவர்களுடைய படங்கள் இருக்கின்றன.

சுந்தரி :—இது எங்கள் படுக்கை அறை. கட்டில் மெத்தை தலையணைகள் இருக்கின்றன. கொசுவலை, போர்வை, பாய், விசிறி, விளக்கு, தண்ணீர் கூஜா முதலியவையும் உள்ளன.

தாஜ்பீபி :—நல்ல அறை. காற்று நன்ருக வீசுகிறது. பெரிய ஜன்னல்கள் உள்ளன. இப்படிப் பட்ட காற்ரேட்டம் உள்ள அறைதான் படுக்கைக்குத் தகுந்தது. மேரி! சுவரில் இராமன், கிருஷ்ணன், சிவ பெருமான், முருகன், விநாயகர், இலக்ஷ்மி இவர்க ளுடைய படங்களைப் பார்!

சுந்தரி :—இது கூடம். தம்பியும் தங்கையும் ஊஞ்சல் ஆடுகின்றனர். தொட்டிலில் குழந்தை தூங்குகிறது.

மேரி : இதோ சுவரில் பார்! இராம கிருஷ்ணர், விவேகாநந்தர், ஏசுநாதர், முஹம்மது நபி, புத்தர், மஹாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ராஜேந்திரர், ராஜாஜி இவர்களுடைய படங்கள் இருக்கின்றனவே! அதோ பார்! எவ்வளவு அழகான பொம்மைகள்!

சுந்தரி :—அவை கொலுப் பொம்மைகள். நவ ராத்திரிப் பண்டிகையின்போது நாங்கள் பொம்மைக் கொலு வைப்போம்.

**தாஜ்பீபி** :—இதுதான் சமையல் அறையோ?

**சுந்தரி** :—ஆம். இதுதான் எங்கள் சமையல் அறை. மண் அடுப்பு இருக்கிறது. இரும்பு அடுப்பு இருக்கிறது. செம்புத் தவலேயும், பித்தலேக் குடமும், வெண்கலப் பானேயும் உள்ளன. மண் தோண்டி, ஈயப் பாத்திரம், கல் சட்டி, வெள்ளித் தட்டுகள் உள்ளன. மத்து, கரண்டி, அம்மி, கொழுவி, உரல், மணே முதலியவையும் உள்ளன. உறியில் பால், தயிர், மோர், நெய், எண்ணெய் இவை இருக்கின்றன. அலமாரியில் சமையல் சாமான்கள் உள்ளன. பலகையில் பாத்திரங்களே அடுக்கி இருக்கிறோம். பரணேயில் விறகும் வறட்டியும் இருக்கின்றன.

**மேரி** :—அதோ அரிவாள் மணேயில் கறி நறுக்குகிறாரே அவரா உன் தாயார்?

**சுந்தரி** :—ஆம். அவரே என் தாயார்.

**தாஜ்பீபி** :—அறை எவ்வளவு சுத்தமாய் இருக்கிறது! பாத்திரங்கள் பளபள என்று இருக்கின்றன! ஐயோ! அதோ ஒரு எலி ஓடுகிறதே! அதைத் துரத்திக்கொண்டு ஒரு பூனேயும் ஓடுகிறது!

**சுந்தரி** :—சமையல் அறையில் எலியும் பூனேயும் ஓடுவது இயல்பே. ஈயும் கொசுவுமே இருக்கலாகாது. நாங்கள் பூனேயைச் சோறு போட்டு வளர்க்கிறோம். அது எலி பிடிக்கும். வாருங்கள், கொட்டிலுக்குப் போவோம்.

| | | |
|---|---|---|
| சரஸ்வதி | இராம கிருஷ்ணர் | ராஜேந்திரர் |
| திருவள்ளுவர் | விவேகாநந்தர் | ராஜாஜி |
| பாரதியார் | ஏசுநாதர் | பொம்மைகள் |
| காற்ருேட்டம் | முஹம்மதுநபி | பொம்மைக் கொலு |
| கிருஷ்ணன் | புத்தர் | பரணை |
| சிவபெருமான் | மஹாத்மா காந்தி | பளபள |
| இலக்ஷ்மி | ஜவஹர்லால் நேரு | கொட்டில் |
| விநாயகர் | அலமாரி | பீரோ |

## பயிற்சி

1. உங்கள் படிப்பு அறையில் உள்ள பொருள்களைச் சொல்.
2. உங்கள் கூடத்தில் மாட்டியுள்ள படங்களைச் சொல்.
3. உங்கள் சமையல் அறையில் உள்ள பொருள்களைச் சொல்.
4. இரும்பு—எறும்பு, அரி—கறி—இவற்றை உச்சரித்து வித்தியாசத்தைத் தெரிந்துகொள்.
5. கறி—கரி, உறி—உரி, அறி—அரி, அறை—அரை—இவற்றின் பொருள் வித்தியாசத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்.
6. சுவர், கிணறு இவ்வார்த்தைகளைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி அமைத்து எழுது.

   படத்தைச் ——— மாட்டு. ——— நீர் இருக்கும்.

7. இவற்றைக் கவனி :

| | | |
|---|---|---|
| போனுர் | ஓடுகிறது | வருவார் |
| வந்தோம் | இருக்கிருள் | வைப்போம் |

8. இவற்றைக் குறித்துக் கொள் :

| | | |
|---|---|---|
| இரும்பு | வெள்ளி | பித்தளை |
| ஈயம் | செம்பு | வெண்கலம் |



# 21. எங்கள் குடும்பம்—3

**மேரி** :—இதுதான் கொட்டிலோ ?

**சுந்தரி** :—ஆம். இதன் கூரை ஓலையால் அமைந்தது. கூரையின்மேல் சுரைக் கொடி, பீர்க்கங் கொடி, பூசணிக் கொடி இவை படர்ந்துள்ளன. அதோ ஒரு சேவலும் கூரையின்மேல் நிற்கிறது. கொட்டிலின் உள்ளே இரண்டு பசுக்கள், ஒரு கிடாரிக் கன்று, ஒரு சேங்கன்று, இரண்டு எருமைகள், ஒரு நாகுக் கன்று, ஒரு கிடாக் கன்று இவைகள் இருக்கின்றன. பசு அசை போடுகிறது. எருமை புல் தின்கிறது. இரண்டு கிடாக்கள் தொட்டியில் நீர் குடிக்கின்றன. இரண்டு எருதுகள் வைக்கோல் தின்கின்றன. அதோ வெளியே வைக்கோல் போர் இருக்கிறது. இது குப்பை மேடு.

தாஜ்பீபி :—சாணத்தில் கொசுவும் ஈயும் மொய்க்கின்றனவே. ஐயோ ! காலில் எறும்பு கடிக்கிறது. வாருங்கள் போய்விடலாம்.

சுந்தரி :—அதோ இடையன் வருகிறுன். அவன் பால் கறக்க வருகிறுன். அவனேடு அவன் வளர்க்கும் நாயும் வருகிறது. அவன் கன்றை அவிழ்த்து விடுவான். கன்று பால் உண்ட பிறகு அவன் அதைப் பிடித்துக் கட்டுவான். பசுவின் கால்களேக் கயிற்ருல் அணேவான். செம்பில் பாலேக் கறப்பான். பிறகு கன்றை அவிழ்த்து விட்டுவிடுவான். அதோ கன்று அவனேப் பார்த்துவிட்டது. அது என்ன பாடு படுகிறது பார் !

மேரி :—அவன் ஏன் கைகளேக் கழுவிக் கொள்ளுகிறுன் ?

சுந்தரி :—அழுக்குக் கையால் பால் கறந்தால் பால் கெட்டுவிடாதா ? அதனுல் அவன் கைகளேச் சுத்தம் செய்து கொள்ளுகிறுன்.

மேரி :—அப்படியானுல் செம்பைக் கழுவ வேண்டாமா ?

சுந்தரி :—நான் எழுந்ததுமே பால் செம்பைக் கழுவிச் சுத்தம் செய்து வைத்தேன்.

மேரி :—அப்படியானுல் சரிதான்.

சுந்தரி :—இது தோட்டம். அது தோட்டக் கிணறு. அதில் ராட்டினமும் ஏற்றமும் இருக்கின்றன. தோட்டத்தில் தென்னே, வாழை, மா, பலா

முதலிய மரங்கள் இருக்கின்றன. கிச்சிலி, கொய்யா, மாதுளை முதலிய செடிகள் உள்ளன. ரோஜா, சாமந்தி முதலிய பூஞ்செடிகளும், மல்லிகை, முல்லை முதலிய பூங்கொடிகளும் உள்ளன. கீரைப் பாத்தி, அவரைப் பந்தல், கத்தரிச் செடி, மிளகாய்ச் செடி, வெண்டைச் செடி இவைகளும் இருக்கின்றன. தோட்டத்தைச் சுற்றிலும் வேலி போட்டிருக்கிறோம்.

மேரி :—தோட்டம் மிகவும் அழகாக இருக்கிறது. தென்னை மரத்தில் கிளிகள் கொஞ்சுகின்றன. மாமரத்தில் குரங்குகள் தாவுகின்றன. எத்தனை விதமான குருவிகள்! மரங்களில் காய்கள் இருக்கின்றன; பழங்கள் இருக்கின்றன. செடிகளில் பூவும் பிஞ்சும் இருக்கின்றன. கொடிகளில் அரும்பு இருக்கிறது; மலரும் இருக்கிறது. தோட்டத்தில் மரம் செடி கொடிகள் தழைத்து இருக்கின்றன.

சுந்தரி :—தாஜ்! மேரி! உங்களை அதிக நேரம் நிறுத்திவிட்டேன். நீங்கள் என் வீட்டிற்கு வந்ததை நான் பெருமையாக நினைக்கிறேன்.

தாஜ் :—உங்கள் வீட்டிற்கு வந்து நாங்கள் பல விஷயங்களை அறிந்தோம். அடுத்த ஞாயிற்றுக் கிழமை நீ அவசியம் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்.

| | | |
|---|---|---|
| கூரை | கிடாக் கன்று | அரும்பு |
| கிடாரிக் கன்று | வைக்கோல் | சுரை |
| சேங்கன்று | சாணம் | பீர்க்கு |
| நாகுக் கன்று | பிஞ்சு | பூசணி |

## பயிற்சி

1. உங்கள் கொட்டிலில் உள்ள மாடுகன்றுகளைச் சொல்.

2. உங்கள் தோட்டத்தில் உள்ள மரங்களைச் சொல், செடிகளைச் சொல், கொடிகளைச் சொல்.

3. பூஞ்செடிகளையும் பூங்கொடிகளையும் சொல்.

4. காய்க்கும் செடிகளைச் சொல்.

5. பயிராகும் காய்கறிகளைச் சொல்.

6. உங்கள் கொட்டிலைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

7. உங்கள் தோட்டத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

8. மணை—மனை, தழை—தளை, வாழை—வாளை, வேலி—வாளி – இவற்றை உச்சரித்து வித்தியாசத்தைத் தெரிந்து கொள்.

7. சேர்த்து எழுது :

ஞாயிறு + கிழமை, கயிறு + கட்டில், கிணறு + நீர்

8. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

பசுவின் கால்களைக் கயிற்றால் ———.
செம்பில் பாலைக் ———.
தோட்டத்தைச் சுற்றிலும் ——— போட்டிருக்கிறோம்.

9. இவற்றைக் கவனி :

| | |
|---|---|
| வருகிறான் | வருகிறது |
| வருகிறாள் | வருகின்றன. |
| வருகிறார்கள் | |

10. இவற்றைக் குறித்துக் கொள் :

அரும்பு
மலர்
பிஞ்சு
காய்
பழம்



# 22. குடும்பம்

ஒற்றைக் குடும்பம் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை ;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

—பாரதியார்

# 23. நரியின் தந்திரம்

ஒரு காட்டில் ஒரு புலி இருந்தது. அது ஒரு நாள் பொறியில் அகப்பட்டுக் கொண்டது. அந்த வழியாக ஒரு வழிப்போக்கன் வந்தான். புலி அவனை அழைத்தது; பொறியைத் திறந்து தன்னை விடுவிக்கும்படி வேண்டியது. 'நான் உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன்' என்று உறுதி கூறியது.



வழிப்போக்கன் புலியின் சொல்லை நம்பினான்; பொறியைத் திறந்து புலியை விடுவித்தான். அது உடனே அவன்மேல் பாய வந்தது. வழிப்போக்கன் பயந்து ஓடினான். புலி அவனைத் துரத்திக் கொண்டு ஓடியது.





வழியில் ஒரு நரி இருந்தது. வழிப் போக்கன் நரியிடம் நடந்ததைச் சொன்ஞன்; நியாயம் கூறும்படி அதை வேண்டிஞன். நரி வழிப் போக்கனையும் புலியையும் அழைத்துக் கொண்டு பொறி இருக்கும் இடத்திற்கு வந்தது.

நரி புலியைப் பார்த்து 'நீ இந்தப் பொறிக்குள் எப்படி இருந்தாய்? காட்டு' என்றது. புலி பொறிக்குள் புகுந்தது. 'பொறி எப்படி மூடியிருந்தது?' என்று வழிப் போக்கனைக் கேட்டது. அவன் பொறியின் கதவை மூடித் தாள் இட்டுக் காட்டிஞன். நரி வழிப் போக்கனைப் பார்த்து, 'அறிவில்லாதவனே, துஷ்டனுக்கு உபகாரம் செய்யலாமா? நல்ல வேளையாகத் தப்பிஞய். வா, போகலாம்' என்றது.





புலி நரியை அழைத்து, ‘பொறியைத் திறக்காமலே போய் விடுகிறீர்களே’ என்றது. நரி, ‘சற்றுப் பொறு, வேடன் வருவான். அவன் திறந்து விடுவான்’ என்று சொல்லி விட்டுத் தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றது. வழிப் போக்கனும் உயிர் பிழைத்து ஊர் போய்ச் சேர்ந்தான்.

**விடைசொல் :**

(1) புலி எப்படி பொறியிலிருந்து வெளிப்பட்டது ?
(2) நரி செய்த தந்திரம் என்ன ?
(3) வழிப்போக்கன் புலியினிடமிருந்து தப்பியது எப்படி ?
(4) இந்தக் கதையிலிருந்து நீ என்ன தெரிந்து கொள்கிறாய் ?

**பயிற்சி**

1. இந்தக் கதையை மவுனமாக வாசி.
2. இந்தக் கதையைப் புலி சொல்லுவதாகச் சொல்.
3. இந்தக் கதையை வழிப்போக்கன் சொல்லுவதாகச் சொல்.
4. இந்தக் கதையை நரி சொல்லுவதாகச் சொல்.
5. நரியின் தந்திரத்தைப் பற்றி உனக்குத் தெரிந்த வேறு ஒரு கதை சொல்.
6. இவற்றை மவுனமாக வாசி.

இடையன்—இடைச்சி
வண்ணான்—வண்ணாத்தி
தட்டான்—தட்டாத்தி
குயவன்—குயத்தி
குறவன்—குறத்தி

# 24. படம் பார்த்துக் கதை சொல்



# 25. வீட்டு மிருகங்கள்

மிருகங்களில் பலவகை உண்டு. சில மிருகங்களை வீடுகளில் வளர்க்கிறோம். சில மிருகங்கள் காடுகளில் வசிக்கின்றன. பசு, ஆடு, நாய், பூனை, கழுதை, முதலியவை வீட்டு மிருகங்கள். சிங்கம், புலி, கரடி, யானை முதலியவை காட்டு மிருகங்கள்.

பசு : பசு சாதுவான பிராணி. பசு பால் கொடுக்கும். பசுவின் பால் உடம்புக்கு நல்லது. பால் வெண்மை நிறம் உடையது. பாலில் புரை ஊற்றினால் தயிர் ஆகும். தயிரில் நீரைக் கலந்து மோர் ஆக்குவார்கள். மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயைக் காய்ச்சினால் நெய் ஆகும். பசு புல் மேயும் ; வைக்கோலும் தின்னும். பசு அசை போடும் பிராணி. பசுவை எல்லா வீடுகளிலும் வளர்ப்பார்கள்.



எருது : எருது பசு இனத்தைச் சேர்ந்தது. எருது பயிர்த் தொழிலுக்கு உதவும். எருது ஏர் உழும் ; வண்டி இழுக்கும். செக்கு இழுக்கவும், கபிலை ஏற்றம், கரும்பு ஆலை இவற்றை இழுக்கவும் எருது உபயோகப் படுகிறது.



1789—4

ஆடு : ஆடு பசுவைப் போலச் சாதுவான பிராணி. ஆடும் பால் கொடுக்கும். ஆட்டுக்கு வால் குட்டை. ஆட்டில் வெள்ளாடு, செம்மறி ஆடு, குறும்பாடு எனப் பலவகை உண்டு. வெள்ளாட்டுப் பால் உடம்புக்கு நல்லது. வெள் ளாடு தழை தின்னும். மற்ற ஆடுகள் புல் மேயும். ஆட்டின் உடம்பில் மயிர் அடர்ந்திருக்கும். ஆட்டு மயிரால் கம்பளம் நெய்வார்கள். ஆட்டுச் சாணம் சிறந்த எரு ஆகும்.



குதிரை : குதிரை வேகமாக ஓடும் பிராணி. குதிரைக்குக் கொம்பு இல்லை. குதிரையின் கழுத்தில் நீளமான மயிர் அடர்ந்து இருக் கும். அதற்குப் பிடரி என்பது பெயர். குதிரைக்கு வாலிலும் மயிர் அதிகம். குதிரையின் கால் குளம்பில் பிளவு இல்லை. குதிரை புல் மேயும்; கொள்ளும், கடலை யும் தின்னும். குதிரை அசை போடாது. குதிரை வண்டி இழுக்கும். குதிரையின் மேல் ஏறிச் சவாரி செய்வார்கள். சில தேசங்களில் குதிரை ஏர் உழவும் உபயோகப்படுகிறது.



கழுதை : கழுதை விகாரமான மிருகம். அது குதிரை இனத்தைச் சேர்ந்தது. கழுதை மூட்டை

சுமக்கும். கழுதை பொறுமையும் மந்தமும் உள்ள பிராணி. வண்ணூர், குறவர், கல் ஒட்டர் முதலியவர்கள் கழுதையை வளர்ப்பார்கள். கழுதை புல் மேயும். கழுதையில் கோவேறு கழுதை என ஒருவகை உண்டு. அது வண்டி இழுக்கும்.



**நாய் :** நாம் வளர்க்கும் பிராணிகளில் நாய் மிகச் சிறந்தது. நாய் நன்றி உள்ள பிராணி. நாயின்



வால் வளைந்து இருக்கும். நாய் மாமிசம் தின்னும்; சோறும் தின்னும். நாய் மோப்பம் பிடிக்கும். நாய் வீட்டைக் காக்கும். நாய் தலைவன் சொற்படி நடக்கும். நாய் அயலாரைக் கண்டால் குரைக்கும்; தலைவனைக் கண்டால் வாலைக் குழைத்து ஆட்டும், நாய் வேகமாக ஓடும்; நன்றாக வேட்டை ஆடும். நாய் நமக்கு நல்ல தோழன் ஆகும்.

**பூனை :** பூனை வீடுகளில் வளரும். பூனைக்கு மீசை உண்டு. பூனைக்குப் பகலை விட இரவில் நன்றாகக் கண் தெரியும். பூனையின் கால்களில் நகம் உண்டு. பூனை நடக்கும் போது நகத்தைச் சுருக்கிக் கொள்ளும். அது வேண்டும் போது நகத்தை நீட்டிக் கொள்ளும். பூனை எலியைப்



பிடித்துத் தின்னும். பூனே பதுங்கிப் பாயும். பூனே கோபம் கொண்டால் சீறும். மாமிசமே பூனேக்கு முக்கியமான ஆகாரம். அது பாலும் சோறும் உண்ணும். பூனே வஞ்சகம் உள்ள பிராணி.

இந்த வீட்டுப் பிராணிகள் நம்மை அண்டிப் பிழைப்பவை ஆகும். இவை நமக்குப் பலவகைகளில் பயன்படுகின்றன. இவை நமக்காக உழைக்கின்றன. நாம் இவற்றை அன்போடு ஆதரிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சிங்கம் | பயிர்த்தொழில் | பிடரி | மோப்பம் |
| புலி | செக்கு | குளம்பு | வேட்டை |
| கரடி | கபிலே ஏற்றம் | சவாரி | தோழன் |
| சாதுவான | ஆலே | விகாரமான | குரைக்கும் |
| புரை | வெள்ளாடு | பொறுமை | மீசை |
| தயிர் | செம்மறியாடு | குறவர் | மாமிசம் |
| மோர் | குறும்பாடு | ஒட்டர் | ஆகாரம் |
| வெண்ணெய் | கம்பளம் | கோவேறுகழுதை | அயலார் |
| மந்தம் | கொம்பு | நன்றி | வஞ்சகம் |

## பயிற்சி

1. உனக்குத் தெரிந்த வீட்டு மிருகங்கள் ஐந்து சொல்.
2. உன் வீட்டில் வளரும் மிருகங்களேச் சொல்.
3. அவற்றின் உபயோகத்தைச் சொல்.
4. பசுவுக்கும் ஆட்டுக்கும் உள்ள ஒற்றுமையைச் சொல்.
5. எருதுக்கும் குதிரைக்கும் உள்ள வேற்றுமையைச் சொல்.
6. உனக்குத் தெரிந்த காட்டு மிருகங்கள் மூன்று சொல்.
7. கோடிட்ட இடங்களில் 'வசி' என்னும் வார்த்தையைப் பொருத்தமாக அமைத்து வாசி.

(1) மனிதர்கள் நாட்டில் ——. (2) பசு வீட்டில் ——.
(3) பறவை மரத்தில் ——. (4) மீன்கள் நீரில் ——.

8. அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களில் பொருத்தமானதைக் கோடிட்ட இடத்தில் அமைத்து வாசி :

(1) பசு ——— வசிக்கும். (காட்டில், நாட்டில்)
(2) வெள்ளாட்டுப் பால் உடம்புக்கு ———.
(நல்லது, கெட்டது)
(3) குதிரைக்குக் கொம்பு ——— (உண்டு, இல்லை)
(5) நாய் ——— தின்னும். (மாமிசம், புல், தழை)
(5) பூனைக்கு ——— கண் நன்ருகத் தெரியும்.
(பகலில், இரவில்)

9. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைச் சேர்த்து வாசி :

மீன் —— வசிக்கும். காகம் —— வசிக்கும்.
பூனை —— வசிக்கும். யானை —— வசிக்கும்.
வாத்து —— இடும். நாய் —— போடும்.
மாடு —— போடும். மனிதர் —— பெறுவார்கள்.

10. இவற்றை மவுனமாக வாசி :

| | |
|---|---|
| நாய் | குரைக்கும் |
| குதிரை | கனைக்கும் |
| கழுதை | கத்தும் |
| பன்றி | உறுமும் |
| யானை | பிளிறும் |
| சிங்கம் | கர்ஜிக்கும் |
| பாம்பு | சீறும் |
| ஆந்தை | அலறும் |
| மயில் | அகவும் |
| கிளி | கொஞ்சும் |
| காகம் | கரையும் |
| நரி | ஊளையிடும் |




# 26. மிருகங்கள்

பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா ;
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலை உழுதுவரும் மாடு ;
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

—பாரதியார்.

# 27. பறவைகள்

பறக்கும் பிரயாணியைப் பறவை என்கிறோம். நாம் குருவி, காகம், கோழி முதலிய பறவைகளைப் பார்க்கிறோம். பறவைகளுக்கு இறக்கை உண்டு. பறவைகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். பறவைகளில் பலவகை உண்டு.

பறவைகளில் சிறியது குருவி. குருவி சுறுசுறுப்புள்ள பறவை. அது ஓயாமல் அலைந்து திரிந்து



கொண்டே இருக்கும். குருவி வீட்டுக் கூரைகளிலும், கிணற்றுச் சந்துகளிலும், மரப் பொந்துகளிலும் கூடு கட்டி வசிக்கும். அது வைக்கோல், சருகு, பஞ்சு இவற்றால் கூடு கட்டும். சில குருவிகள் மரக்கிளைகளில் தொங்கு கூடு கட்டுவது உண்டு. அவை மெல்லிய நாரால் கூட்டைப் பின்னும். அந்தக் கூடு அழகாக இருக்கும். குருவி தானியம், புழு, பூச்சி ஆகியவற்றைத் தின்னும். குருவி அதிக உயரத்தில் பறவாது.



காகம் கருமை நிறமானது. காகம் கள்ளத்தனம் உள்ள பறவை. காகம் மரக்கிளைகளில் குச்சிகளாலும் முள்ளாலும் கூடு கட்டி வசிக்கும். காகம் குருவியைவிடப் பெரியது. காகம் அழுகிய பண்டங்களையும், செத்த பிராணிகளையும் தின்னும்.

அது புழு பூச்சிகளையும் தின்னும்; தின்பண்டங்களை யும் திருடித் தின்னும். காகம் அசுத்தங்களைத் தின்று காற்றைச் சுத்தம் செய்யும். அதனால் அதற்கு 'ஆகாயத்தோட்டி' என்பது பெயர். காகம் இனத்தோடு ஒற்றுமையாக வாழும்; ஆகாரத்தைக் கண்டால் இனத்தைக் கரைந்து அழைக்கும்; இனத்தோடு அதைத் தின்னும். காகம் அதிகாலையில் எழுந்து கரையும். காகம் காலை மாலை இரண்டு வேளைகளிலும் நீரில் குளிக்கும். காகம் உயரத்தில் பறக்கும். அது அதிக தூரம் வேகமாகப் பறந்து போகும்.

கிளி பறவைகளில் மிகவும் அழகானது. கிளியின் நிறம் பச்சை. கிளி மரப் பொந்துகளில் வசிக்கும். கிளியின் மூக்கு அடி பருத்து நுனி வளைந்து இருக் கும். கிளியின் மூக்குச் சிவப்பு நிறமானது. கிளி காய் கனி களைக் கொந்தித் தின்னும். கிளி மூக்கினால் கொட்டையை உடைத் துப் பருப்பைத் தின்னும். கிளி



இனிமையாகக் கொஞ்சும். கிளியைப் பிடித்துக் கூண்டில் வைத்து வளர்ப்பார்கள். வளர்க்கும் 'கிளி பால் குடிக்கும்; சோறும் தின்னும். கிளியைப் பேசப் பழக்குவார்கள். பழகின கிளி நன்றாகப் பேசும். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை. கிளிக்குப் பகை பூனை. பூனையைக் கண்டால் கிளி அஞ்சும்.

146260

மயில் ஒரு விநோதமான பறவை. மயில் பறவைகளில் பெரியது. மயிலுக்குக் கழுத்தும் கால்



களும் நீண்டு இருக்கும். மயிலின் மூக்கு நீண்டு கூர்மையாக இருக்கும். மயிலுக்குத் தலையில் கொண்டை உண்டு. ஆண் மயிலுக்கு நீளமான தோகை உண்டு. மயில் தோகையில் கண்கள் இருக்கும். மயில் தோகையை விரித்துக்கொண்டு ஆடும். மயிலுக்கு மேகத்தைக் கண்டால் மகிழ்ச்சி உண்டாகும். அப்பொழுது அது ஆடத் தொடங்கும். பெண்மயிலுக்குத் தோகை இல்லை. மயில் தாழவே பறக்கும். அது அதிக தூரம் பறவாது. மயிலுக்குத் தானியமே முக்கிய உணவு. மயிலும் மனிதர் வளர்க்கும் பறவை ஆகும்.

கோழியை வீட்டில் வளர்ப்பார்கள். ஆண் கோழி ·சேவல் எனப்படும். சேவலுக்கு நீண்டு அடர்ந்த சிறகு உண்டு. சேவலின்



தலையில் சிவப்பு நிறமுள்ள கொண்டை இருக்கும். பெட்டைக் கோழிக்குக் கொண்டை இல்லை. பெட்டைக் கோழியின் சிறகு குட்டையாக இருக்கும். கோழி புழு பூச்சிகளையும், தவிடு தானியங்களையும் பொறுக்கித் தின்னும். கோழி குப்பை கிளறும். கோழி விடியற்காலையில் கூவும். கோழி முட்டை இட்டு அடை

காக்கும். குடியானவர்கள் கோழியை வளர்ப் பார்கள்.

வாத்து நீரில் வாழும் பறவை. வாத்து பருத்த உடலும், நீண்ட கழுத்தும், குட்டையான காலும் உடையது. வாத்தின் மூக்கு நீண்டு தட்டையாக இருக்கும். வாத்து நீரில் நன்ருக நீந்தும். வாத்தின் கால் விரல்கள் ஒன்ருேடு ஒன்று தோலால் சேர்க்கப்பட்டு



உள்ளன. வாத்தின் இறகில் நீர் ஒட்டாது. வாத்து சேற்றைக் கிளறிப் புழு பூச்சிகளைப் பிடித்து விழுங் கும். வாத்து நிலத்தில் அசைந்து அசைந்து நடக்கும். வாத்துக்குப் பறக்கத் தெரியாது. குடியான வர்கள் வாத்தை வளர்ப்பார்கள்.

இந்தப் பறவைகளில் ஒன்றைப் போல மற்ருென்று இல்லை. இவற்றின் உருவங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இவற்றின் குரல்கள் நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். இவை சிறுவர்களோடு சேர்ந்து விளையாடும். நாம் இவற்றிற்கு இரக்கப்பட வேண்டும்; இவற்றை அன்போடு நேசிக்க வேண்டும்.

## பயிற்சி

(1) உனக்குத் தெரிந்த வேறு மூன்று பறவைகளைச் சொல்.
(2) அவற்றின் நிறம் சொல்.
(3) அவற்றின் ஆகாரத்தைச் சொல்.
(4) திருத்தி வாசி:

தென்னைக்கு விதை இல்லை.
பனை மரத்திற்குக் கிளை உண்டு.
புலி வீட்டில் வசிக்கும்.
பசு காட்டில் வசிக்கும்.
காகம் நீரில் வசிக்கும்.
கோழி நன்ருகப் பேசும்.
பெண் மயிலுக்குத் தோகை உண்டு.

(5) கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி:

பறவைகளில் ——— குருவி.
மயில் பறவைகளில் ———.
ஆண் மயிலுக்குத் தோகை ———.
பெண் மயிலுக்குத் தோகை ———.
மயில் ஒரு ——— பறவை.

(6) இவற்றை மவுனமாக வாசி:

| | |
|---|---|
| பூனைக் குட்டி | பறவை பறக்கும் |
| கோழிக் குஞ்சு | குதிரை ஓடும் |
| எருமைக் கன்று | மீன் நீந்தும் |
| கிளிப் பிள்ளை | பாம்பு ஊரும் |
| தென்னம் பிள்ளை | ஆமை நகரும் |
| வாழைக் கன்று | தவளை தத்தும் |
| கத்தரி நாற்று | குரங்கு தாவும் |
| | நாம் நடப்போம் |



# 28. பறவைகள்

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா ;
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா ;
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

—பாரதியார்



# 29. எங்கள் பாடசாலை—1

**தேவன்** :—இராமா! நீ படித்துக் கொண்டிருக்கிருயே, அது என்ன புத்தகம்?

**இராமன்** :—இது 'கோவை தமிழ் வாசகம்', இரண்டாம் புத்தகம்.

**தேவன்** :—நீ எந்த வகுப்பில் படிக்கிருய்?

**இராமன்** :—நான் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்.

**தேவன்** :—நீ படிக்கும் பள்ளிக்கூடம் எங்கு இருக்கிறது?

**இராமன்** :—நான் படிக்கும் பள்ளிக்கூடம் ஊருக்கு வெளியில் சாலை ஓரத்தில் இருக்கிறது.

இப்பொழுது சும்மாத்தானே இருக்கிருய்? எங்கள் பள்ளிக்கூடத்தைக் காட்டுவேன் வா.

**தேவன்** :—நானே உன்னை அழைத்துப் போகச் சொல்லலாம் என்று எண்ணினேன். நீயே அழைத் தாய். வா, போவோம்.

**இராமன்** :—இதுதான் எங்கள் பாடசாலை. பாடசாலைக்கு முன் இரண்டு பெரிய ஆல மரங்கள் தழைத்து இருக்கின்றன பார்.

**தேவன்** :—பாடசாலை மிகவும் அழகாக இருக் கிறது. இது எங்கள் பாடசாலையை விடப் பெரியது. எங்கள் பாடசாலை சிறியது. இதில் எத்தனை வகுப்பு கள் இருக்கின்றன ?

**இரர்மன்** :—இதில் ஐந்து வகுப்புகள் இருக் கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் ஆண் பிள்ளை களும், பெண்பிள்ளைகளும் படிக்கிருர்கள்.

**தேவன்** :—இதில் எத்தனைப் பிள்ளைகள் படிக் கிருர்கள்? எத்தனை ஆசிரியர்கள் வேலை செய் கிருர்கள் ?

**இராமன்** :—இதில் ஆணும் பெண்ணுமாக நூறு பிள்ளைகள் படிக்கிருர்கள். இதில் மூன்று ஆசிரியர் களும் இரண்டு ஆசிரியைகளும் வேலை செய்கிருர்கள்.

**தேவன்** :—எங்கள் பாடசாலை மிகவும் சிறியது. அதில் மூன்று வகுப்புகளே உண்டு. ஆனுல் அதில்

முப்பது பிள்ளைகளே படிக்கிறார்கள். ஓர் உபாத்தியாயர் தான் வேலை செய்கிறார்.

**இராமன்** :—வா, உள்ளே போவோம்.

**தேவன்** :—இராமா! இதோ தொங்குகிறதே, அது என்ன ?

**இராமன்** :—அது மணிக்கம்பி. காலையில் பாட சாலை தொடங்கும்போதும், பகலில் இடைவேளை விடும் போதும், மாலையில் முடிவடையும் போதும் மணியை அடிப்பார்கள். காலையில் மணி அடித்ததும் பிள்ளை கள் ஒழுங்காக வந்து ஓர் இடத்தில் நிற்பார்கள். அங்குப் பிரார்த்தனை நடக்கும். அப்பொழுது பிள்ளை கள் அமைதியாக இருப்பார்கள். பிரார்த்தனை முடிந்த தும் வரிசையாக வகுப்புக்களுக்குப் போவார்கள்.

**தேவன்** :—அதோ பார், மாணவர்கள் அமைதி யாகப் பாடத்தைக் கவனிக்கிறார்கள். ஒரு மாணவி நிற்கிறாள். ஒரு மாணவன் எழுதுகிறான்.

**இராமன்** :—அவர்தான் தலைமை ஆசிரியர். அவர் கரும்பலகையில் கணக்குப் போட்டுக் காட்டு கிறார்.

**தேவன்** :—சுவரில் என்னென்னவோ எழுதி இருக்கின்றனவே அவை யாவை?

**இராமன்** :—அவை பழமொழிகள். கதைப் படங்கள், எழுத்து அட்டைகள், தேசப்படங்கள் இவை மாட்டப்பட்டு இருக்கின்றன பார்.

**தேவன்** :—ஆம். இதோ கடிகாரம் கூட இருக்கிறது. அதோ சிறுவர்களும் சிறுமிகளும் பாடுகின்றார்களே, இங்குப் பாட்டும் கற்றுக் கொடுக்கிறார்களா?

**இராமன்** :—ஆம். அதோ நிற்கிறாரே, அந்த அம்மையாரே பாட்டு கற்பிக்கும் ஆசிரியை.

**தேவன்**—அந்தப் பீரோவில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவே ஏன்?

**இராமன்** :—அவற்றைப் பிள்ளைகள் படிப்பதற்காக வைத்திருக்கிறார்கள். பிள்ளைகள் இஷ்டப்பட்ட புஸ்தகத்தை வாங்கிப் படிக்கலாம். அதில் சிறிய கதைப் புத்தகங்களும் இருக்கின்றன. அதை நூல் நிலையம் என்பார்கள். அதோ பார், நாங்கள் செய்த சாமான்கள். களிமண்ணாலும், அட்டையாலும், வர்ணக் காகிதத்தாலும் விதம் விதமான சாமான்கள் செய்து வைத்திருக்கிறோம். இது மாணவர் காட்சிச் சாலை.

**தேவன்** :—களிமண் கிராமமும், அட்டைப் பள்ளிக்கூடமும், காகிதச் சாமான்களும் மிகவும் அழகாக இருக்கின்றன.

**இராமன்** :—இன்னும் பார். தானியங்கள், மரச் சாமான்கள், தராசு, படி, குருவிக் கூடு முதலியவை இருக்கின்றன.

**தேவன்** :—மரக் கலப்பையும், வண்டியும் அழகாக

உள்ளன. பிள்ளைகள் பாயில் அமர்ந்திருக்கிறார்களே, பெஞ்சு, சாய்வு மேஜை இல்லையா ?

**இராமன்** :—எங்கள் பாடசாலையில் பிள்ளைகள் பாயிலேயே அமரவேண்டும். ஆசிரியர்களுக்கு மாத்திரம் நாற்காலி, மேஜை உண்டு. அவற்றையெல்லாம் நாங்களே செய்கிறோம். வா, பிள்ளைகள் தொழில் செய்யும் இடத்திற்குப் போவோம்.

| | | | |
|---|---|---|---|
| காட்சிச்சாலை | நூறு | பிரார்த்தனை | ஆசிரியை |
| களிமண் | மணிக் கம்பி | வரிசையாக | கதைப் புத்தகம் |
| கிராமம் | இடைவேளை | பழமொழிகள் | நூல் நிலையம் |
| தானியங்கள் | பலமுறை | அம்மையார் | விதம் விதமான |

## பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூடத்தின் பெயரைச் சொல்.
2. உங்கள் பள்ளிக்கூடம் தொடங்கும் நேரமும் முடியும் நேரமும் சொல்.
3. உங்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனைப் பிள்ளைகள் படிக்கிறார்கள் சொல்.
4. உங்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனை ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள் சொல்.
5. உங்கள் பாடசாலையில் உள்ள பொருள்களைச் சொல்.
6. அவற்றுள் நீங்கள் செய்த பொருள்களைச் சொல்.
7. கோடிட்ட இடங்களில் 'ஒரு' என்னும் சொல்லை ஏற்றவாறு மாற்றி அமைத்துப் படி.

—— நிற்கிறான். —— நிற்கிறாள்.
—— நிற்கிறார். —— நிற்கிறது.

8. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து சேர்த்துப் படி.

பாடசாலை காலையில் ——— (முடிவடையும், தொடங்கும், (நடக்கும்)

மணிக் கம்பி ——— (நிற்கிறது, கிடக்கிறது, தொங்குகிறது.)

ஒரு மாணவி———(நிற்கிறான். நிற்கிறாள். நிற்கிறார்.)

மரக்கலப்பையும் வண்டியும் அழகாய் ———(இருக்கிறது. (இருக்கின்றன.)

9. கோடிட்ட இடங்களில் 'இரு' என்னும் சொல்லை ஏற்ற வாறு மாற்றி அமைத்துப் படி.

மாணவன் அமைதியாக ———.
மாணவி அமைதியாக ———.
மாணவர்கள் அமைதியாக ———.
ஆசிரியர் ———.
கடிகாரம் ———.
தேசப் படங்கள் ———.

10. இவற்றை மவுனமாக வாசி :

கற்கண்டு இனிப்புச் சுவை உள்ளது.
மிளகாய் கார்ப்புச் சுவை உள்ளது.
பாகற்காய் கைப்புச் சுவை உள்ளது.
கடுக்காய் துவர்ப்புச் சுவை உள்ளது.
உப்பு உவர்புச் சுவை உள்ளது.
புளி புளிப்புச் சுவை உள்ளது.

# 30. எங்கள் பாடசாலை—2

**இராமன் :**—இதுதான் எங்கள் தொழிற்சாலை. இரண்டு பெண்கள் பஞ்சைக் கொட்டை நீக்குகிருர்கள். இரண்டு பிள்ளைகள் பஞ்சு அடிக்கிருர்கள். சில பெண்கள் பட்டை போடுகிருர்கள். சிறு பிள்ளைகள் தக்ளியில் நூல் நூற்கிருர்கள். பெரிய பிள்ளைகள் ராட்டையில் நூற்கிருர்கள்.



**தேவன் :**—உங்களுக்குத் துணி நெய்யக்கூடத் தெரியுமோ? அதோ சிலர் தறியில் நெய்கிருர்களே. அந்த அறையில் என்ன நடக்கிறது?

**இராமன் :**—அங்குப் பிள்ளைகள் தச்சு வேலை செய்கின்றனர். அவர்கள் மரத் தட்டு, சிறிய பீரோ, நாற்காலி, முக்காலி, மேஜை, பெஞ்சு முதலியவை செய்கின்றனர். பிரம்பாலும் மூங்கிலாலும் பெட்டி, நாற்காலி, மேஜை, தட்டு, கூடை, தூக்கு கூடை முதலியவையும் செய்கிருர்கள்.



**தேவன் :**—அந்தப் பெண்கள் அங்கு என்ன செய்கிருர்கள்?

**இராமன்** :—அவர்கள் கோரை கிழிக்கிறார்கள். பக்கத்தில் இரண்டு பிள்ளைகள் பாய் நெய்கிறார்கள் பார்!

**தேவன்** :—அந்த அறையில் என்ன நடக்கிறது?

**இராமன்** :—அதில் தையல் வேலை நடக்கிறது. அங்குப் பெண்களும் பிள்ளைகளும் தையல் கற்றுக் கொள்ளுகிறார்கள். பெண்களுக்குப் பூ வேலையும், மணி கோத்தலும் கற்றுக்கொடுக்கிறார்கள். அதன் பக்கத்தில் பார்! சிலர் கயிறு திரிக்கின்றனர். சிலர் வலை பின்னுகின்றனர். சிலர் தடுக்கு முடைகின்றனர்.

**தேவன்** :—என்ன ஆச்சரியம்! இது புது மாதிரியான பள்ளிக்கூடமாக இருக்கிறதே! உனக்கும் இவையெல்லாம் செய்யத் தெரியுமோ?

**இராமன்** :—ஓ, தெரியுமே! அதோ பார். அது தான் எங்கள் பாடசாலைத் தோட்டம். அதை நாங்களே வைத்து வளர்த்தோம். நாங்கள் தினந்தோறும் தோட்டவேலை செய்வோம். வா, விளையாடும் இடத் திற்குப் போவோம்.

**தேவன்** :—இதுதான் விளையாடும் இடமோ? சிறுவர்களும் சிறுமிகளும் ஆடுகிறார்களே.

**இராமன்** :—ஆம். சிறுவர்கள் கண்மூடி ஆட் டம், பாரிக் கோடு, பிள்ளையார் பந்து, சடுகுடு ஆட்டம், ஓடிப் பிடித்தல், தேடிப் பிடித்தல், நொண்டி ஆட்டம் முதலிய ஆட்டங்கள் ஆடுகிறார்கள். சிறுமிகள் சிலர் ஈட்டி ஆடுகிறார்கள். சிலர் கயிறு

தாண்டுகிருர்கள். சிலர் கழங்கு, அம்மானை, பந்து இவற்றை ஆடுகிருர்கள்.

**தேவன்** :—எங்கள் பாடசாலையில்கூட இந்த விளையாட்டுகள் எல்லாம் உண்டு. ஆனுல் இவ்வளவு உற்சாகமாக விளையாடமாட்டார்கள். அதோ, பிள்ளைகள் கூட்டமாக இருக்கிருர்களே, அங்கு என்ன நடக்கிறது?

**இராமன்** :—சிறுவர்கள் இராட்டினம் சுற்றுகிருர்கள். இது சருக்கு மரம். இதில் சிறுவர் சருக்கல் ஆடுகிருர்கள். அது பலகை ஏற்றம். அதன் இரண்டு



முனைகளிலும் இரண்டு பிள்ளைகள் அமர்ந்து ஆடுகிருர்கள். அதோ பார், பெரிய பிள்ளைகள் பார் பழகுகிருர்கள். ஒருவன் ஓடுகிருன். இருவர் தாண்டுகிருர்கள். ஒருவன் தண்டால் எடுக்கிருன். மற்ருெருவன் பஸ்கி எடுக்கிருன். வேருெருவன் கரளா சுற்றுகிருன். இருவர் குஸ்தி செய்கிருர்கள். இருவர் கோல் விளையாடுகிருர்கள்.

**தேவன்** :—இராமா! அதோ பிள்ளைகள் வரிசையாக நிற்கிருர்களே, அவர்கள் என்ன செய்கிருர்கள்?

**இராமன்** :—அங்கு மேல் வகுப்புப் பிள்ளைகள் தேகப் பயிற்சி செய்கிருர்கள். ஆசிரியர் அவர்களைப் பழக்குகிருர். அவர் எப்படிப் பழக்குகிருர் பார்!

ஆசிரியர் கட்டளை இடுகிறபடி பிள்ளைகள் செய்வதைக் கவனி.

**தேவன் :**—விளையாடும் இடம்கூட இவ்வளவு சுத்தமாக இருக்கிறதே! நான் ஒவ்வொரு இடத்தையும் கவனித்து வந்தேன். வகுப்பு அறைகள், சுவர்கள், பாடசாலைப் பொருள்கள் எல்லாம் சுத்தமாகவும் அழகாக வும் இருக்கின்றன. பிள்ளைகள் சுத்தமாகவும் ஒழுங் காகவும் இருக்கிறார்கள். பாடசாலை என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும்.

**இராமன் :**—பாடசாலையை நாங்களே சுத்தம் செய்கிறோம். நாங்கள் பாடசாலையில் அசுத்தம் செய்ய மாட்டோம். குப்பைகளைக் கண்ட இடத்தில் போட மாட்டோம்; குப்பைக் கூடையிலேயே கொண்டு போடுவோம். தினமும் இருமுறை பெருக்கிச் சுத்தம் செய்வோம். சுவர்களில் கிறுக்க மாட்டோம். பாட சாலைப் பொருள்களின் அழகைக் கெடுக்க மாட்டோம். சுத்தமும் ஒழுங்கும்தான் நாங்கள் கற்கும் முதல் பாடம்.

**தேவன் :**—இராமா, இதைப் போன்ற பாட சாலையை நான் பார்த்ததே இல்லை. உங்கள் பாடசாலை நடவடிக்கைகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. அடுத்த வருஷம் நானும் இந்தப் பாடசாலைக்கே வந்து விடுவேன். என் நண்பர்களையும் அழைத்து வருவேன். உனக்கு வணக்கம்.

**இராமன் :**—நல்லது. அதோ மணி அடிக் கிறார்கள். பாடசாலை முடிந்து விட்டது. பிள்ளைகள்

ஒழுங்காகப் போகிறார்கள் பார். நாமும் போவோம், வா.

| | | | |
|---|---|---|---|
| தொழிற்சாலை | தடுக்கு | கூட்டமாக | குஸ்தி |
| பட்டை | ஒழுங்கு | சருக்கல் | தேகப் பயிற்சி |
| தறி | பாரிக்கோடு | முனைகள் | கட்டளை |
| கோரை | கழங்கு | தண்டால் | அசுத்தம் |
| தையல் வேலை | அம்மானை | பஸ்கி | நடவடிக்கை |
| வலை | உற்சாகமாக | கரளா | நண்பர்கள் |

### பயிற்சி

1. உங்கள் பாடசாலையில் கற்பிக்கப்படும் தொழில்களைச் சொல்.
2. உனக்குத் தெரிந்த தொழில்களைச் சொல்.
3. உங்கள் பள்ளிக்கூடத் தோட்டத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் சொல்.
4. உங்கள் பள்ளிக்கூடத்தில் விளையாடும் விளையாட்டுக்களைச் சொல்.
5. உனக்கு இஷ்டமான விளையாட்டு எது என்பதைச் சொல்.
6. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து படி :

ஒருவன் ஓடுகிறான்
ஒருத்தி ———
ஒருவர் ———
இருவர் ———
பலர் ———
ஒன்று ———
பல ———

7. இவற்றை மவுனமாக வாசி :

சிறுவன்—சிறுமி
மாணவன்—மாணவி
ஆசிரியர்—ஆசிரியை

# 31. யார்? என்ன செய்கிறார்?





# 32. நன்றியுள்ள நாய்

(ஒரு சம்பவம்)

ஓர் ஊரில் ஒரு நாய் இருந்தது. அது மிகவும் நல்ல நாய். அது இரவில் தூங்காமல் ஊரைச் சுற்றி வரும்; திருடரைக் கண்டால் குரைத்து ஊர் மக்களை எழுப்பும். ஊரார் அதனிடம் அன்பாக இருந்தார்கள்.

ஒரு நாள் அந்த நாய் ஒரு திருடனைத் துரத்திக் கொண்டு ஓடியது. திருடன் அதன்மேல் கல்லை வீசி எறிந்தான். கல் அதன் காலில் தாக்கியது. காலில் காயம் உண்டாகியது. காயத்திலிருந்து இரத்தம் பெருகியது.

நாய் நொண்டிக்கொண்டே வைத்திய சாலைக்குச் சென்றது. அது அங்கு வைத்தியரைச் சுற்றிச் சுற்றி வந்தது; காயம்பட்ட காலைத் தூக்கிக் காட்டியது. அங்கு இருந்தவர்கள் அதை வெருட்டினார்கள். வைத்தியர் அவர்களைத் தடுத்தார். அவர் நாயின் காலைக் கவனித்தார். காலில் காயம் பட்டிருப்பதைப்

பார்த்தார். அவர் காயத்தைக் கழுவிச் சுத்தம் செய்தார் ; பிறகு மருந்து வைத்துக் கட்டினார்.

நாய் நாள்தோறும் வைத்தியசாலைக்கு வந்தது. வைத்தியரும் அன்போடு அதற்கு மருந்து வைத்துக் கட்டுக் கட்டி வந்தார். சில நாள்களில் காயம் ஆறி விட்டது. நாய் முன்போலவே ஊரைக் காத்து வந்தது.

ஒரு நாள் நாய் வீதியில் படுத்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது வைத்தியர் சைக்கிளில் அவ்வழியாகச் சென்றார். நாய் வைத்தியரைக் கண்டதும் எழுந்து வாலைக் குழைத்தது. வைத்தியர் சட்டைப் பையிலிருந்து ஒரு காகித உறை கீழே விழுந்தது. வைத்தியர் அதைக் கவனிக்கவில்லை. அவர் வேகமாகப் போய்விட்டார். நாய் அதைப் பார்த்து விட்டது. அது அதனை வாயில் கௌவிக்கொண்டு வைத்தியரைப் பின் தொடர்ந்து ஓடியது.

வைத்தியர் வீட்டை அடைந்ததும் சட்டைப் பையைப் பார்த்தார். அதில் காகித உறை இல்லை. 'ஐயோ! அதில் நூறு ரூபாய் நோட்டு வைத்திருந்தேனே! எங்கேயோ விழுந்து விட்டதே!' என்று அலறினார்.

அப்பொழுது நாய் வைத்தியர் வீட்டிற்குள் நுழைந்தது. அது வாயில் கௌவிக் கொண்டு வந்த காகித உறையை வைத்தியர் காலடியில் வைத்தது; முகத்தை நிமிர்த்தி அவரைப் பார்த்துக் கொண்டே வாலைக் குழைத்து நின்றது.

வைத்தியர் ஆச்சரியம் அடைந்தார்; நாயின் நன்றியறிவை மெச்சினர்; அதற்குப் பாலும் சோறும் கொடுத்தார். அன்று முதல் அது வைத்தியர் வீட்டு நாய் ஆகியது.

| | | | |
|---|---|---|---|
| திருடர் | இரத்தம் | வைத்தியர் | உறை |
| காயம் | வைத்தியசாலை | மருந்து | நோட்டு |

## விடை சொல்

(1) நாய்க்கு ஏன் காயம் பட்டது ?

(2) நாய் காயத்தை எப்படி ஆற்றிக் கொண்டது ?

(3) நாய் வைத்தியருக்கு என்ன உதவி செய்தது ?

## பயிற்சி

1. இந்தக் கதையை மவுனமாக வாசி.
2. இந்தக் கதையை நாயே சொல்வதாகச் சொல்.
3. இந்தக் கதையை வைத்தியர் சொல்வதாகச் சொல்.
4. இந்தக் கதையை ஊரார் சொல்வதாகச் சொல்.
5. திருத்தி வாசி :

    சேணியன் பாத்திரம் செய்வான்
    கன்னன் துணி நெய்வான்
    கொத்தன் மண் வெட்டுவான்
    ஒட்டன் சுவர் வைப்பான்
    பண்டாரம் நீர் பாய்ச்சுவான்
    வெட்டியான் சங்கு ஊதுவான்

6. இவற்றை மவுனமாக வாசி :

    கோழிக் குஞ்சு
    பூனைக் குட்டி
    எருமைக் கன்று
    தென்னம் பிள்ளை
    வாழைக் கன்று

# 33. படம் பார்த்துக் கதை சொல்





# 34. கொடி வணக்கம்

கொடி வணக்கமது செய்வோம் — நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம் ;
முடி வணங்கியதைப் போற்றி — அதன்
மூன்று நிறக்குறிகள் சாற்றி.

பச்சையான ஒரு தோற்றம் — நமக்குப்
பக்தி வேண்டுமெனச் சாற்றும் ;
இச்சையான பொருள் கூடப் — பக்தி
இருக்க வேணுமதை நாட.

துய்ய வெள்ளைநிறக் காட்சி — உண்மை
துலங்கும் என்பதற்குச் சாட்சி ;
மையமாக நிற்கும் மர்மம் — சத்தியம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம்.

துறவின் வர்ணமந்தக் காவி — உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி ;
சிறையும் வீடும் அதற்கொன்றே — என்னும்
சேதி ஓதுவதற் கென்றே.

—ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை



# 35. பாப்பாப் பாட்டு

பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா.
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா.
தேம்பி அழுங் குழந்தை நொண்டி—நீ
திடம்கொண்டு போராடு பாப்பா.

—பாரதியார்.

# 36. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. நல்லிணக்கம் அல்லாரோடு இணங்க வேண்டாம்.
7. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
8. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
9. தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
10. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
11. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.
12. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
13. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.
14. கருதாமல் கருமங்கள் செய்ய வேண்டாம்.
16. செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
17. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
18. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
19. கோயில் இல்லா ஊரில்குடி இருக்கவேண்டாம்.
20. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
21. புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
22. கோள் சொல்லிக் குடிகேடு செய்ய வேண்டாம்.

—உலகநாத கவிராயர்

RTR / 834

